9th August 1963]

திரு. இராம. அரங்கண்ணல் : அடுத்த பொங்கலுக்காவது காவேரி நீர் சென்னைக்குக் கிடைக்குமா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : கனம் அங்கத்தினர் பொங்கலுக்குள்ளாக அப்படி விசேஷமாக என்ன செய்யப் போகிறுர் என்று சொன்னுல், அதற்குள் அரசாங்கம் சென்னைக்கு எப்படியாவது தண்ணீர் கொண்டு வருவதற்கு முயற்சி எடுக்கும்.

Master-Plan for Madras City

* 75 *Q*.—Sri K. A. MATHIALAGAN : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) whether the Government have sanctioned a scheme for the investigation and preparation of a master-plan for the Madras city; and

(*b*) if so, the details thereof?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் :

(அ) ஆம்.

(இ) சென்னைமாநகர் நகரப் பகுதிக்கு மாஸ்டர் பிளான் ஒன்றைத் தயாரிப்பதற்காக மத்திய அரசாங்கம் ஊக்குவிக்கும் திட்டம் ஒன்று அனுமதிக்கப்பட்டுள்ளது. முதல் நிலையில், சென்னை மாநகர்ப் பகுதிக்குத் தோராயமான அபிவிருத்தித் திட்டம் ஒன்றைத் தயாரித்து, முடிவில் விரிவாக மாஸ்டர் பிளான் ஒன்றைத் தயாரிப்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும். மாஸ்டர் பிளான் தயாரிப்பதற்கு ஆரம்ப நிலையில் தேவைப்படும் பணியாளர் களை அமர்த்திக்கொள்ளவும் அனுமதி கொடுக்கப்பட்டுள்ளது. மாஸ்டர் பிளான் தயாரிப்பதற்காக பூர்வாங்கப் புள்ளிவிவரங்கள் சேகரிக்கப்பட்டு வருகின்றன. 1967-ம் ஆண்டு இறுதிக்குள் மாஸ்டர் பிளான் தயாரிக்கப்பட்டுவிடும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.

*80-அ கேள்வி.—திரு. இராம. அரங்கண்ணல் : கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—

(அ) யேல் பல்கலைக் கழக நகர அபிவிருத்தி பேராசிரியர் களான வால்டர் ஹாரிஸ், நிப்ஸன் ட்யூன்ஸ் ஆகியோரிடமிருந்து சென்னை மாநகரம் பற்றி ஏதாவது ஒரு மாஸ்டர் பிளான் அரசிடம் ஒப்படைக்கப்பட்டதா ?

(இ) அந்த அறிக்கையின் பேரில் எடுத்துக்கொள்ளப்பட்ட நடவடிக்கை என்ன ?

The Hon. Srimathi JOTHI VENCATACHELLUM : (*a*) The report furnished by the team of American Experts headed by Mr. Waltern Harris does not contain any master-plan as such for the Madras City, but it envisages the establishment of an Institute of Planning for Post-Graduate education in Town and Country Planning. The preparation of the master-plan for the Madras City will be undertaken by that institute on its formation.